


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 4 ஜுன் 2004 கனி 7

ஆண்டு சந்தா Rs.50/-

ஆசிரியர்

B. அர்ஜுனன்

# யார் வேதாகமத்தை வாசிக்கவேண்டும்?

## Who Should Read The Bible?



இளைஞர் ------------ எப்படிவாழ எனக் கற்றுக்கொள்ள

வயோதிபர் ------------ எப்படி மரிக்க என அறிய

படிப்பில்லாதோர் ------ ஞானத்திற்காக

படித்தவர் ------------ தாழ்மைக்காக

செல்வந்தர் ------------ கருணைக்காக

ஏழை ---------------- ஆறுதலுக்காக

பெலவீனர் ------------ பெலத்திற்காக

அகந்தையுள்ளோர் ---- எச்சரிப்புக்காக

தாழ்மையுள்ளோர் ----- உயர்த்தப்படுவதற்காக

துன்பப்படுவோர் ------ சமாதானத்திற்காக

சோர்வடைந்தோர் ----- இளைப்படைய

சந்தேகிப்போர் -------- நம்பிக்கைக்காக

பாவி ---------------- இரட்சிப்பிற்காக

கிறிஸ்தவன் ----------- போதிக்கப்பட

### உதடு

உதடுகளின் மாறுபாட்டை உனக்குத்தூரப்படுத்து--- நீதி.4:24

ஆகாமியம் என் உதடுகளுக்கு அருவருப்பானது --- நீதி.8:7

புத்திமான்களின் உதடுகளில் விளங்குவது ஞானம் --- நீதி.10:13

பகையை மறைக்கிறவன் பொய் உதடன் --- நீதி.10:18

தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான் --- நீதி10:19

நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும் --- நீதி.10:21

உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய்
எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம் --- எபி.13:15

அறிவுள்ள உதடுகளோ விலையுயர்ந்த இரத்தினம் --- நீதி.20:15

உன் உதடுகளினால் வஞ்சகம்பேசாதே --- நீதி.24:28

உதடுகளின் மதுரம் கல்வியைப் பெருகப்பண்ணும் --- நீதி.16:21

### ஆன்மீக ஆலோசனை

"சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்" சங்.20:7

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
**WORLD LITERATURE PUBLICATIONS**
**Post Box No. 5, Batlagundu - 624 202.**
**SOUTH INDIA.**

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 4 ஜூன் - 2004 கனி - 7


ஆசிரியருரை

# ஆவியிலே அனலாயிருங்கள்

## Fervent In Spirit



அப்போஸ்தலனாகிய பவுல் ரோமா புரியிலுள்ள தேவப்பிரியரும் பரிசுத்தவான் களாகும்படி அழைக்கப் பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதும்போது "ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்"(ரோம.12:11) என்று எழுதுகிறார். இப்படி பவுல் எழுதுவதின்நோக்கம் என்ன? என்று நாம் ஆராய்ந்து பார்க்கும்போது ஒருவேளை ரோமாபுரியார் ஆவியில் அனலற்று இருந்திருப்பார்கள். இன்றைக்கும் பல சபைகள் ஆவியில் அனலற்று இருப்பதை நாம் காண்கின்றோம். ஆவியில் அனலாயிருப்பது எப்படி? ஆவியிலே அனலாயிருப்பதால் வரும் ஆசீர்வாதம் என்ன? என்பதைப்பற்றி நாம் தியானிக்கும் முன் வெளிப்படுத்தின விசேஷத்திற்கு நாம் செல்லவேண்டியது அவசியமாயிருக்கிறது. இங்கு லவோதிக்கேயா சபைக்கு கர்த்தர் சொல்லும்போது "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்"(வெளி.3:15,16) என்கிறார். ஒரு பொருள் அனலாகயிருந்தால் பத்திரமாக இருக்கும் அதைப்போல் குளிராகயிருந்தாலும் பத்திரமாகயிருக்கும். இரண்டுமில்லாமல் வெதுவெதுப்பாக இருந்தால் அது கெட்டுப்போய்விடும். அதேபோல் நாம் ஒன்று அனலாக இருக்கவேண்டும் இல்லையேல் குளிராக இருக்கவேண்டும் அப்படி இருந்தால் நலமாயிருக்கும் இல்லையேல் நான் உன்னை வாந்திபண்ணிப்போடுவேன் என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

கர்த்தர் லவோதிக்கேயா நாட்டு சபைக்கு இப்படி சொல்வதன் காரணம் ஒன்று இருப்பதாக வரலாற்று ஆராய்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். என்னவென்றால் லவோதிக்கேயா நாட்டை சுற்றி ஓடும் நீர்கால்களின் தண்ணீர் சூடாக குடிப்பதற்கும், குளிராக குடிப்பதற்கும் நன்றாக

இருக்குமாம். வெதுவெதுப்பாக குடித்தால் மிகவும் கசப்பாக இருக்குமாம். அதை வாயில் ஊற்றியவர்கள் உடனே துப்பிவிடுவர்களாம். ஆகவே இதை மையமாக கொண்டு கர்த்தர் இந்த திருச்சபைக்கு திருவுளம்பற்றுகிறார் என்று கூறுகின்றனர். ஆம் கர்த்தரும் விதை விதைக்கிறவனைப்பற்றிய உவமை, பரலோக ராஜ்யம் கடலிலே போடப்பட்டு சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது போன்ற உவமைகள் எல்லாமே பூமியிலே உள்ள ஒரு பொருளை மையமாக வைத்தே பேசுகிறார். இது நமக்கு புரிந்து கொள்வதற்கும் வசதியாக இருக்கிறது.

**ஆவியிலே அனலாயிருப்பது எப்படி?**

நம்முடைய ஆவியும் சரீரமும் ஒன்றுக்கொன்று விரோதமாக இருப்பதாக வேதம் நமக்கு விளக்குகிறது. "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது"(கலா.5:17). ஆனபடியினாலே நாம் மாம்சத்திற்கு அடிமையாகிவிடலாமா? கூடாதே "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்"(ரோம.8:13) என்ற வசனத்தின்படி ஆவியை அனலுள்ளதாக மாற்றி மாம்சத்தின் செய்கைகளை அழிக்க முற்படவேண்டும். ஆவியிலே அனலாயிருப்பது என்பது குதிப்பதல்ல அல்லது ஏதோ ஒரு வித்தியாசமான சப்தத்துடன் துள்ளுவதும் அல்ல. தேவனை அறியாத அஞ்ஞானிகள் அருள்வந்ததாக ஆடுகிறார்களே அதைப்போலவும் அல்ல. எப்படியென்றால், "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்"(நீதி.25:28) மேலும் "அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்"(ரோம.8:5). ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரிய காரியங்களை சிந்திக்க வேண்டும். மேலும் "ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்;" (1கொரி.2:15). நாம் ஆவிக்குரியவர்கள் என்றால் ஆவிக்குரிய வசனங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். வேதாகமத்தை மூடிவிட்டு கண்களை மூடிக்கொண்டு உணர்ச்சி வசப்பட்டு நம்மைநாமே அனலுண்டாக்க செய்வோமானால் அவ்விதமான பக்தி நம்மை நாமே வஞ்சிக்கச்செய்யும். பெரோயா பட்டணத்தார் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினாலே, தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். கர்த்தரும் "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே"(யோவா.5:39) என்றார்.

"ஆவியினாலே நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல"(கலா.5:18). ஆனபடியினாலே நாம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். எப்படியென்றால் "புது உடன் படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து

கொல்லுகிறது. ஆவியோ உயிர்ப்பிக்கிறது"(2கொரி.3:6). நீங்கள் இப்படிப் பட்டதான உடன்படிக்கையின்படி மீட்கப்பட்டவர்களானால் ஆவிக்குரியவர் களாயும், பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயுமிருப்பீர்கள். "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்று உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா?"(1கொரி.6:19). நாமே தேவனுடைய ஆலயமாக இருக்கிறபடியால் நாம் ஆவியிலே அனலுள்ளவர்களாயிருக்கவேண்டியது அவசியம்.

தேவன் பழைய உடன்படிக்கையின் காலத்தில் ஆசரிப்புக் கூடாரத்தில் "குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும்படி இடித்துப்பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுவாயாக. ஆசரிப்புக்கூடாரத்தில் சாட்சி சந்நிதிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கு வெளிப்புறமாக ஆரோனும் அவன் குமாரரும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம் மட்டும் கர்த்தருடைய சந்நிதானத்தில் அந்த விளக்கை எரியவைக்கக் கடவர்கள்; இது இஸ்ரவேல் புத்திரருக்கு தலைமுறை தலைமுறையாக நித்திய கட்டளையாயிருக்கக் கடவது"(யாத்.27:20,21) என்றார். இஸ்ரவேலின் மத்தியில் தேவன் இருக்குமிடத்தில் எப்பொழுதும் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கவேண்டுமென்று ஆசாரியர்களுக்கு நித்திய கட்டளையை கொடுத்தார். அந்தப்படியே சாமுவேலும் கர்த்தருடைய ஆலயத்தில் பணிவிடை செய்தான் என்று 1 சாமுவேல் 3-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் வாசிக்கின்றோம். இஸ்ரவேலின் மத்தியில் வாசம் செய்த தேவன் இப்புதிய உடன்படிக்கையின் காலத்தில் நம் எல்லோருக்குள்ளும் வாசம் செய்கிறவராயிருக்கிறார். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக் கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?"(1கொரி.3:16) அவர் நமக்குள்ளே வாசம் செய்கிறபடியால் அன்று ஆசரிப்புக்கூடாரத்தில் குத்துவிளக்கு ஏற்றப்பட்டதுபோல இன்று நாம் ஆவியில் அனலுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அன்று ஆசாரியர்கள் தேவனுக்கு பணிவிடைசெய்தார்கள் இன்று "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்"(1பேது.2:9). ஒவ்வொருவரும் அவருக்கு ஊழியஞ் செய்யத்தக்கதாக அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்தஜாதியாயும் அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கின்றோம். அதை அறிந்து புரிந்து நாம் ஆவியிலே அனலாயிருந்து கர்த்தருக்கு ஊழியஞ் செய்யக்கடவோம். எச் சூழ்நிலையிலும் உங்களுடைய "ஆவியை அவித்துப்போடாதிருங்கள்" (1தெச.5:19). அதை ~~அனல்~~ மூட்டி எழுப்பிவிடும்படி பிரயாசப்படுங்கள்.

**ஆவியிலே அனலாயிருந்தால் வரும் ஆசீர்வாதம் என்ன?**

ஆவியை அவித்துப்போடுவதினால் ஒரு ஆசீர்வாதமும் இல்லை என்பதை நாம் முதலாவது உணரவேண்டும். ஆவியிலே அனலுள்ளவர்களாயிருப்பதால் வரும் ஆசீர்வாதம் அநேகம் அதில் ஒரு சிலவற்றை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1. "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை"(ரோம.8:1). ஆண்டவருக்குள் இருந்து கொண்டு மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடந்தோமானால் நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என வாசிக்கின்றோம்.

2. "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார்"(ரோம.8:11). நீங்கள் தேவனுடைய ஆலயமாகவும், தேவன் உங்களோடும் இருந்தால் சாவுக்கேதுவான உங்களுடைய சரீரங்கள் உயிர்ப்பிக்கப்படும்.

3. "மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்"(ரோம.8:6). மாம்சத்திற்குரியவன் மாம்சத்திற்குரியவைகளை சிந்திக்கிறான். ஆனால் ஆவிக்குரியவனோ ஆவிக்குரியவைகளை சிந்திக்கிறான். இப்படிப்பட்டவர்களுக்கு ஜீவனும் சமாதானமும் அருளப்படுகிறது.

4. "தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்"(கலா.6:8). தன் மாம்சத்திற்கென்று செய்கிற காரியங்கள் மாம்சத்தை பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றுக்கும் பிரயோஜனப்படாது அதன் முடிவோ மரணம்! ஆனால் ஆவிக்கென்று நாம் செய்யக்கூடிய காரியங்கள் நித்திய ஜீவனுக்கேதுவான காரியங்களை செய்யத் தூண்டும். அதனால் நமக்கு கிடைக்கும் பலன் அழியாத வாழ்வு (நித்தியஜீவன்).

மேற்கண்ட ஆசீர்வாதங்களை நாம் ஆவியில் அனலாயிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். அனலாயிருப்பது என்றால் ஆவியின்படி நடப்பது, நம்முடைய இருதயங்களை தேவனுடைய ஆலயமாக வைப்பது, ஆவிக்குரிய சிந்தையிலிருப்பது, ஆவிக்கென்று விதைப்பது, ஆவிக்குரியவர்கள் என்றால் பிரிவினை சபையாரும் அல்ல கூச்சலுக்கும் குழப்பத்திற்கும் காரணமானவர்களும் அல்ல. பின் யாரென்றால் "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா.5:24). இப்படிப்பட்டவர்ளே ஆவிக்குரியவர்களும் கிறிஸ்தவர்களுமாயிருக்கிறார்கள். ஆவியிலே அனலாயிருந்து கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்.

**இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் (1தெச.5:17)**

# முன்பின் அறியாத பாஷைகளில் பேசுதல்

## Speaking In New Tongues

*J.C.Choate*



இன்று அந்நிய "பாஷைகளில்" பேசுவதைப் பற்றி அநேக ஜனங்கள் சம்பாஷிக்கின்றதை நாம் கேள்விப் படுகிறோம். அதன் ஓசைகள் புரிந்து கொள்ள முடியாததாக இருக்கின்றன. மேலும் அவற்றைப் பற்றிய விவரமும் காரணமும் கேட்கும் போது, அவர்கள் தாங்கள் "பரலோக" பாஷை பேசுகின்றதா கவும், அந்த பாஷை தேவனால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியது எனவு பதிலளிக் கின்றனர். உண்மையாகவே வேதம் கற்பிக்கிறது என்ன என்பதை அறிவோமானால், இவைகள் எல்லாமே வேத வாக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு மாறாக உள்ளது என்பதை நாம் அறிவோம்.

அப்போஸ்தலர்கள் - மேலும் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் வாக்களிக்கப்பட்டிருந்தது யோவான்14:26; லூக்கா24:49; மற்றும் அப்போஸ்தலர்1:8 வசனங்களை வாசியுங்கள். கர்த்தர் வாக்களித்திருந்தபடி பெந்தெகொஸ்தே நாளிலே, எருசலேம் நகரில் அவர்கள் அந்த வல்லமையைப் பெற்றார்கள். ஆவியானவர் அங்கு கூடியிருந்த எல்லார் மேலும் 'ஊற்றப்பட'வில்லை, ஆனால் அப்போஸ்தலர்கள் மேல் மட்டுமே ஊற்றப்பட்டார். கர்த்தர் இனி ஒருபோதும் அவர்களோடு மாம்சத்தில் இருக்கப்போவதில்லை என்பதினால் அவர்கள் இந்த பெலத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

அந்த சமயம் புதிய ஏற்பாடு அவர்களுடைய பிரசங்கத்திற்கு உதவியாக எழுத்துவடிவில் இல்லை, மேலும் அப்போஸ்தலர்கள் சத்தியத்தைப் போதித்துக் கொண்டிருந்ததால், அதை அறிந்து கொள்ளுவதற்கு மக்களால் புதியஏற்பாட்டை நோக்கி செல்ல முடியவில்லை. இந்த இடைக்கால நாட்களில், அப்போஸ்தலர்கள் அங்குள்ள மக்களின் பாஷைகளில் பேச வல்லமையுள்ளவர்களாகும்படிக்கும், கர்த்தருடைய வேலையில் தொடந்து முன்னேறிச் செல்ல பலவிதமான அற்புதகளைச் செய்வதற்கும் பரிசுத்த ஆவியின் வல்லமை அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலர் 2-ல் காணப்படுவதுபோல, அப்போஸ்தலர்கள் அங்கிருந்த ஜனங்களின் பாஷைகளைப் பேச

7வல்லமையுடையவர்களாகவும், புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவு மிருந்தார்கள். இன்று 'அந்நிய பாஷைகளில்' தங்களால் பேச முடியும் என உரிமை பாராட்டுகிறவர்கள், உண்மையாகவே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றிராதபடியினால் அவர்கள் பேசுகின்ற பாஷைகள் சபையாரால் சிறிய காரணங்களுக்குக்கூட புரிந்து கொள்ளக் கூடாததா யிருக்கிறது. உண்மையில், அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, அவர்கள் தங்கள் அருகில் நின்று தங்களுடைய செய்திகளை சபையாருக்கு மொழிபெயர்க்கும்படிக்கு அங்குள்ள ஜனங்களை கூலிக்கு அமர்த்துவார்கள். இப்படிப்பட்ட காரியம் அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டிருந்தது என எங்கேயாவது நாம் வாசிக்கிறோமா? இல்லை! மாறாக, அந்த அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஊழியஞ்செய்து கொண்டிருந்தார்களென நிரூபிக்கும் வண்ணமாக அவர்கள் அங்கிருந்த ஜனங்களின் பாஷைகளில் சரளமாகப் பேச வல்லமையுடைய வராயிருந்தார்கள். அவர்கள் இயேசு தங்களுக்குப் போதித்திருந்த எல்லாவற்றையும் நினைவுகூரும்படிக்கும் வல்லமை பெற்றவர்களா யிருந்தார்கள். அவர்கள் சகல சத்தியத்திற்குள் நடத்தப்பட்டார்கள், வரவிருக்கிற காரியங்களை முன்னக்கூடியே சொல்லும் வல்லமை யுடையவர்களாயிருந்தார்கள் மேலும் அவர்களால் வியாதியஸ்தர்களை குணமாக்கவும் மரித்தவர்களை உயிரோடெழுப்பவும் முடிந்தது. மனுஷர், இன்று, அப்போஸ்தலர்கள் போல் தாங்களும் அதே வல்லமை பெற்றிருக்கிறோம் என்று உரிமைபாராட்டுகிறவர்கள், அப்போஸ்தலர் செய்தது போல் அவர்கள் கூறுகிற 100% நடைபெறவேண்டும். அவர்கள் தங்களுடைய உண்மையை நிரூபிக்கும்படி இந்த பரீட்சையில் தேறமுடியுமா?

சபையின் ஆரம்ப நாட்களில், வளர்ந்து வரும் சபையின் சரீர தேவைகளுக்கென சரியாக ஊழியஞ்செய்யும்படிக்கு அப்போஸ் தலர்களுக்கு உதவி தேவையாயிருந்தது. அவர்கள் பரிசுத்த ஆவியில் நிறைந்திருந்த ஏழுபேரை அவர்களில் தேர்ந்தெடுத்து அவர்களை இந்த விசேஷித்த வேளைக்கென்று ஏற்படுத்தும்படிக்கு சகோதரரைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார்கள் என்பதைக் கவனியுங்கள்---இது அப்.2:38ல் எழுதப்பட்டபடி பரிசுத்த ஆவியின் வரம் ---ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியின் அற்புதம் செய்யும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. இது கிறிஸ்துவினிடம் வருகிறவர்கள் **எல்லாரும்** பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறுகின்றனர் என்ற தவறான உபதேசத்தை மறுக்கிறது. அப்.2லிருந்து அப்.6 வரையிலுள்ள பகுதிகளை வாசிப்பதிலிருந்து **அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப்**

**பெற்றிருந்தார்கள்** என்பது வெளிப்படையாக தெரியக்கூடியதாய் இருக்கிறது. மற்ற யாவரும் தண்ணீரில் ஞானஸ்நானம் மட்டுமே பெற்றிருந்தனர், பரிசுத்த ஆவியின் அற்புதம் செய்யும் வல்லமையின் நிறைவினை, அதாவது பரிசுத்தஆவியின் வரத்தினைப் பெற்றிருக்க வில்லை. எனவே ஏழுபேர் தெரிந்தெடுக்கப் பட்டனர், மேலும் அவர்கள் அற்புதங்கள் செய்யவும், மற்ற பாஷைகளில் பேசவும், இன்னும் பல காரியங்களைச் செய்யவும் வல்லமையுடையவர் களாயிருக்கும்படிக்கு அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்.

இந்தச் சம்பவங்கள் நமக்கு ஆவியின் நான்கு 'அளவுகளைக்' காண்பிக்கிறது:

1. கிறிஸ்துவுக்கு அளவில்லாமல் அல்லது எல்லையில்லாமல் பரிசுத்தஆவியானவர் கொடுக்கப்பட்டார் (யோவா.3:34)

2. அப்போஸ்தலர்கள் எல்லாவிதமான அற்புதங்களைச் செய்யும் வல்லமையுடையவர்களாயிருக்கும்படிக்கும், மற்றவர்களுக்குக் குறிப்பிட்ட சில அற்புதங்களை செய்ய வல்லமையைக் கொடுக்கவும் அப்போஸ்தலர்கள் பரிசுத்தஆவிக்குள் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள் (யோவா.15:26,27; 16:7,8; அப்.1:5,8)

3. எல்லா கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப் படுத்தப்படும் போது, அவர்கள் வாழ்வின் வரமாக பரிசுத்த ஆவியை பெறுகிறார்கள் (அப்.2:38)

4. அப்போஸ்தலர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள்மேல் தங்கள் கைகளை வைத்து, தனித்தனியாக அற்புதங்களைச் செய்யும் , அதாவது கல்லாத ஒருவர் பல பாஷைகளில் பேசும் வல்லமையை பெறுவதற்கும், இன்னொருவர் வியாதியஸ்தரை குணமாக்கும் வல்லமையை பெறுவதற்கும், மற்றொருவர் ஆவியின் வழிநடத்துதலின் மூலம் தீர்க்கதரிசனங்களைப் போதிக்கவும் வேறொருவர் ஞானத்தைப் போதிக்கவும் தக்க வல்லமையை அவர்களுக்குக் கொடுத்தார்கள்- சபையில், பல்வேறு அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்த பல்வேறு வரங்கள் மூலமாக கிறிஸ்தவர்கள் வழி நடத்தப்பட்டார்கள் (1கொரி.12,13,14)

கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப்பின், அவர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமாகி உலக முழுவதற்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும்படி கட்டளையிட்டார். மேலும் அவர் அவர்களுக்கு, விசுவாசிக்கிறவர்கள் இரட்சிப்படையும்படி ஞானஸ்நானப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆனால் விசுவாசியாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்படைவார்கள் என்றும் பிரசங்கிக்கும்படிச் சொன்னார். அவர், "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப்

பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதென்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணி னார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்" (மாற்.16:17-20) என அப்போஸ்தலர்களுக்கு வாக்குப்பண்ணினார். இந்த எல்லா அற்புதகாரியங்களையும் **அப்போஸ்தலர்களுக்கு வாக்குப் பண்ணினார், பொதுவான ஜனங்களுக்கு அல்ல, எல்லா கிறிஸ்தவர் களுக்கும் கூட அல்ல** என்பதை கவனியுங்கள். அவர்கள் நவமான பாஷைகள் அல்லது மொழிகளில் பேசுவதற்கு வல்லமையுடைய வர்களாயிருப்பார்கள் என்பது வாக்குத்தத்தங்களின் ஒரு பகுதியாய் இருந்தது. நாம் சுட்டிக்காட்டிய படி இவைகள் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் நிறைவேறின.

இடையில் அப்போஸ்தலர்கள் மரித்தார்கள், அவர்கள் யார்மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்தார்கள், புதிய ஏற்பாடு எழுத்துவடிவில் கொடுக்கப்பட்டது. இனிமேல் அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயங்கள் தேவையில்லை, அவைகள் முடிந்து போயின. பவுல்கூட, "அன்பு ஒருக்காலும் ஒழியாது தீர்க்கதரிசனங் களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்"(1கொரி.13:8-10) என பிரகடனப்படுத்தினார்.

"அந்த நிறைவானது" என்பது அநேகர் இன்று தவறாக போதிப்பதுபோல் கிறிஸ்துவின் வருகைக்கு ஒப்பிடப்பட்டவையல்ல. "அந்த"என்பது பேசுகிறகாரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஜனங்களுடையவற்றிற்கு அல்ல. சரியாக **நிறைவான சுயாதீனப் பிரமாணமாக இருக்கிற அதுவே நிறைவான பொருள்**, அதாவது **புதியஏற்பாடு**. "குழந்தைக் கேற்ற" அற்புதங்கள் மேல் இனி ஒருபோதும் நாம் நம்பிக்கை வைக்கவேண்டியதில்லை அந்த காரியங்கள் (இன்றும்) மாயவித்தைக் காரர்களாலும் தவறான மார்க்கப் போதகர்களாலும் நடக்கும் மாயமான காரியமாயிருக்கும். மாறாக, வாசிக்கும்படி நாம் கர்த்தருடைய வசனத்திற்குச் சென்று, தேவனுடைய சித்தத்தை அறிந்து, அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற காரியங்களைச் செய்வோம்.

# பாடுபடும் கிறிஸ்தவர்கள்

*சகோ.P.R.சாமி*



**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

நவீன உலகத்தில் ஜீவிக்கும் நமக்கு இந்த புத்திமதிகள் பொருந்தாதைப் போல தோற்றமளிக்கும் அல்லவா? சிட்சையின் மூலமாகத்தான் தேவன் அவர்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார் என்கிறார். எபிரேய ஆசிரியர். மேலும், சரீர தகப்பன் மார்கள் நம்மை சிட்சிக்கும்போது, அவர் களுக்கு அஞ்சி நடக்கிறோம் அல்லவா, தேவனுக்கு எவ்வளவு அதிகமாக அஞ்சி நடக்க வேண்டும் என்கிறார்.

அந்த சிட்சை, தற்காலத்தில் சந்தோஷமாய்காணாது ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய பலனைத்தரும் என்று வலியுறுத்துகிறார், இதைத்தான், கிறிஸ்துவும் "நீதியின் நிமித்தமாய் துன்பப்பட்டால் பாக்கியவான்கள் பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களா யிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் என்றார்.

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்றார் பவுல்.

ஆனால் நாமே துன்பத்தை உருவாக்கிக்கொள்வதில் நன்மை இல்லை. "தீமை செய்து பாடநுபவிப்பதிலும் தேவனுக்குச் சித்தமானால் நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும் என்றார் பேதுரு. மேலும் ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் என்றார் பேதுரு. கிறிஸ்து நமக்காக பாடுபட்டதினால் நமக்காக ஒரு மாதிரியை வைத்து விட்டு போயிருக்கிறார். ஆகவே பேதுரு கூறியபடி கிறிஸ்து நமக்காக பாடுபட்டபடியால், நாமும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாக தரித்துக்கொள்ளவேண்டும்.

தேவனுடைய திருவாசகங்கள் இதற்காகதான் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்மை கண்டித்து உணர்த்தி, சீர்திருத்தி செம்மையான வழியில் நடத்த, பவுல் "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்கிறார்.

வானொலி நேயர்கள் எனக்கு கடிதம் எழுதும்போது, ஏதோ ஒரு பிரச்சனையை சுட்டிக் காட்டாமல் எழுதுவதில்லை. ஆம்! பிரச்சனைக்கு மத்தியில் தான் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். எல்லா பிரச்சனைகளையும், சுலபமாக தீர்க்கும் அற்புத மருந்து என்னிடம் இல்லை. இருந்தால் அதை மக்களுக்கு வழங்கி நான் உலகத்திலேயே ஒரு பெரிய கோடீசுவரனாக மாறி இருப்பேன். எல்லாப் பிரச்சனைகளும் அற்புதமாக, கை குட்டையையோ, ரேடியோவையோ தொட்ட மாத்திரத்தில், மறைந்து விடும் என்று சொல்லி மக்களை ஏமாற்ற விரும்பவில்லை.

உங்கள் பாடு, வியாகுலம், துன்பத்தின் ஆழத்தை நான் அறியேன். ஆனால் கிறிஸ்து அறிந்திருக்கிறார். அவர் அடிச்சுவற்றை பின் பற்றுகிறவர்களுக்கும் அத்துணைபாடுவரும். அவரே தேவக்குமாரனே, இவ்வுலகில் பாடுபடவில்லையா? அவருடைய சீடர்கள் என்று கூறிக்கொண்டு, அவர் நிமித்தம் பாடுபடும் போதோ நீதியினிமித்தம் துன்பப்படும் போதோ, ஏன் முணு, முணுக்கவேண்டும். அது ஒன்றும் நமக்கு பாக்கியமில்லையா? பிரச்சனை எதுவென்றால், சரீர பிரகாரமான காரியங்களை, இவ்வுலக பாடுகளையே எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு அப்படித்தான் இருக்கும். அவர்கள் தான் ஒரே நிமிடத்தில் நிலைமையை மாற்றிவிடும் அற்புதங்களை செய்பவர்கள் என்று கூறிக் கொள்பவர்களிடத்தில் செல்வார்கள்.

கிறிஸ்துவுக்குள்ளான ஆசீர்வாதங்களில், நித்திய வாழ்வு அது மறுமையில், இம்மையில் பரிபூரண ஜீவன், அது என்ன? பாடுகளுக்கு மத்தியிலும், தேவ சமாதானத்தோடு, பரத்தை பற்றிக்கொண்டு, உலகத்தை சமாளிக்கும் திறன்.

நீ கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதினால், அவருடைய சரீரமாகிய சபையில் இருந்து எல்லா ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரனாகலாம். ஒன்று சொல்வோம், அவரோடு பாடு அனுபவிக்க விருப்பமா? தேவனிடத்தில் வா? உங்கள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்கிறோம்.

**மருத்துவ ஆலோசனை**

"சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்" (நீதி.13:14)

பாடம் - 3

# சபையின் ஸ்தாபிதம்
## THE COMING OF THE CHURCH

J.C.Choate

நமது கடந்த பாடத்தில் ஏசாயா2:2,3லும், யோவேல்2:28,29லும், தானியேல்2:44லும் கர்த்தருடைய இராஜ்யம் (அல்லது சபை) கடைசி நாட்களில், எருசலேமில், ஆவியின் வருகையின்போது ஸ்தாபிக்கப்பட்டு சகல தேசத்தாரும் அதற்குள் ஓடி வருவார்கள், அது என்றென்றைக்கும் நிற்கும் எனக் கண்டோம். பின்பு மத்தேயு16:18, மாற்கு9:1, லூக்கா24:46-49, ஆகியவசனங்களில் கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்து, தமது சபையை தான் கட்டுவதாகவும் அது பெலத்தோடே வரும் என்றும், மேலும் மனந் திரும்புதலும், பாவ மன்னிப்பும் அவருடைய நாமத்தில் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்படவேண்டியது என்றும் கூறினார். அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்திற்கு நாம் திரும்பினால் இந்த அதிகாரத்தில் மாத்திரம் மேற்குறித்த அனைத்து தீர்க்கதரிசனங்களும் வாக்குத்தத்தங்களும் நிறைவேறியிருப்பதை கண்டுபிடிக்கலாம்.

அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தை நாம் படிக்கும்போது இந்த நேரத்தில் அப்போஸ்தலர்கள் அனைவரும் எருசலேமில் இருந்தனர். "பெந்தகோஸ்தே என்னும் நாள் வந்த போது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்துவந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். அந்த சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்"(அப்.2:1-6). இந்தப்பதிவேடு தொடர்ந்து கூறுகையில், அநேக தேசத்தார் கூடி வந்திருந்தபோது, "எல்லாரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். மற்றவர்களோ; இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள்.

அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய் யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே, தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது". அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" (அப்.2:12-16,21).

பழைய ஏற்பாட்டு இந்த தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் நிறைவேறியதை காட்டிய பிறகு, பேதுரு தனது பிரசங்கத்தை தொடருகிறார். தேவன் பலத்த செய்கைகளாலும், அற்புதங்களாலும், அடையாளங்களாலும் இயேசுவை அவர்கள் நடுவிலே வெளிப்படுத்தினார் என காட்டுகிறார். அடுத்து, கிறிஸ்து ஆலோசனை சங்கத்தாரிடம் ஒப்புக்கொடுக்கப் பட்டதையும் அக்கிரமக்காரர்களின் கைகளினால் அவர் சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்யப்பட்டதையும் கூறுகிறார். பிறகு மரணத்தினின்று தேவன் அவரை எழுப்பியதையும், மரணவாதையிலிருந்து அவரை விடுதலையாக்கினதையும் குறிப்பிடுகிறார். தனக்கு முன்பிருந்த கூட்டத்தாரை ஏற்றுக் கொள்ளச் செய்ய தாவீதை சுட்டிக்காட்டி, கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து பரமேறிப்போன காரியங்களை குறிப்பிட்டு, அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசு வீற்றிருப்பதைக் காட்டுகிறார். தொடர்ந்து அவர் (பேதுரு) இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப்போடும் வரைக்கும், நீர் என் வலது பாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார், என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார்யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.

அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள், வாக்குத்தத்த மானது, உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி, இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்". "தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்"(அப்.2:32-41,47).

மேற்கொண்டு தொடர்ந்து வரும் வசனங்களில் சபை ஸ்தாபிதம் பெற்றது இவைகள் அனைத்தும் எருசலேமில் நடந்த சம்பவங்கள் என்பதைக் கவனித்திருப்பீர்கள். பரிசுத்த ஆவியின் பெலன் அப்போஸ்தலர்கள் மீது ஊற்றப்பட்டது, நடந்தவைகள் அனைத்தும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன நிறைவேற்றமே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது என்று பேதுரு குறிப்பாய்ச் சொன்னார் (அப்.2:16). எனவே, இதில் சந்தேகமில்லை. மேலும், தீர்க்கதரிசிகள் கடைசி நாட்களில் இவைகள் சம்பவிக்கும் என்று கூறியிருப்பதாலும் தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டபடியே அது நடந்தேறுவதாக பேதுரு கூறுவதாலும், சபை கடைசி நாட்களில் ஸ்தாபிக்கப்பட்டது. சகல தேசத்தாரும் அந்த நாளில் கூடியிருந்தனர். மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் பிரசங்கிக்கப்பட்டது. மூவாயிரம் பேர் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டு, சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆகையால் கிறிஸ்து சபையை எருசலேமிலே கி.பி.33-ல் ஸ்தாபித்தார். அது இன்றும் என்றும் நிலைத்திருக்கும்.

## பாடம்-3
## கேள்விகள்

தயவுசெய்து பின்வருவனவற்றை சொன்னது யார் எனக்குறிப்பிடுக:

1. தனது சபையைக் கட்டுவதாக சொன்னது யார்?-----------
2. "கடைசிநாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்று சொன்னது யார்?
------------------------------------------------------
3. "நீர் என் வலது பாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார்" என்று சொன்னது யார்?
------------------------------------------------------
4. "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்

கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னது யார்?
-----------------------------------

5. "இந்த மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னது யார்?
------------------------------------------------------------

தயவுசெய்து பின்வருவனவற்றைக் குறித்து குறிப்பிடப்பட்ட தீர்க்கதரிசன வசனத்தைக் குறிப்பிடுக:

1. கர்த்தருடைய இராஜ்யம் எப்பொழுது ஸ்தாபிக்கப்படும்?
------------------------------------------------------------
2. எந்தப் பட்டணத்தில் அது ஸ்தாபிக்கப்படும்? ------------
3. எத்தனை பேர் அதற்குள் வருவார்கள்? ------------------
4. அது எத்தோடே வரும்? -----------------------------------
5. எவ்வளவு காலத்திற்கு அது நிலைத்திருக்கும்? -----------

தயவுசெய்து குறிப்பிடப்பட்ட வாக்குத்தத்தங்களைக் குறிப்பிடுக:

1. சபையை யார் கட்டுவார்? --------------------------------
2. சபை எத்துடன் வரும்? -----------------------------------
3. பிரசங்கிக்கப்படுவது என்ன? ----------------------------
4. எத்தனை தேசங்களுடன் வரும்? -------------------------
5. யாருடைய நாமத்திலே அது பிரசங்கிக்கப்படும்?
------------------------------------------------------------

தயவுசெய்து அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திலிருந்து கேள்விகளுக்கு பதில் கொடுக்கவும்:

1. ஆவியைப் பெற்றது யார்? -----------------------------
2. அதற்கான அடையாளங்கள் யாவை? --------------------
3. இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ளச் செய்ய பேதுரு என்ன செய்தான்? ------------------------
4. ஜனங்கள் கேட்ட கேள்வி என்ன? ------------------------
அதற்கு கொடுக்கப்பட்ட பதில் என்ன? -------------------
5. இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்த்தது யார்?
------------------------------------------------------------

தயவுசெய்து விளக்கப்படுத்துக:

1. சபை -----------------------------------------------------
2. தீர்க்கதரிசனம் -------------------------------------------
3. பெந்தெகொஸ்தே ----------------------------------------
4. மனந்திரும்புதல் -----------------------------------------
5. ஞானஸ்நானம் ------------------------------------------

**-selected**

# மனைவியைத் தேர்ந்தெடுக்கும் போது சமயம் முக்கியமல்ல
# Religion Is Not Important When Choosing A Wife

*-Betty Burton Choate*



இந்தியாவில் காலங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன, பழக்க வழக்கங்கள் வெகுவாக மாறிக் கொண்டிருக்கின்றன, விசேஷமாக நகரங்களில் மாறிக் கொண்டிருக்கின்றன. இளைஞர்கள் ஒரு கணவனை அல்லது மனைவியைத் தெரிந்தெடுப்பதில் தங்களுடைய சுய விருப்பத்தை நிறைவேற்றவே விரும்புகின்றனர். பலமுறை, தங்களுடைய பூரண வளர்ச்சியடையா பருவத்தில், அவர்கள் அழகை, அல்லது வசீகரத்தை அல்லது செல்வத்தை தாங்கள் உள்ளத்தில் நினைக்கின்றவற்றை வாழ்க்கைத் துணையில் எதிர்பார்க்கின்றனர். ஒழுங்குபடுத்தப்பட்ட திருமணங்களில் கூட, பொற்றோரால் கருதப்பட்ட மிக முக்கியமான குணாதிசயங்கள் பட்டியலின் தலைப்பில் எப்போதும் இடம் பெறுவதில்லை.

ஒரு இளைஞன் தன் வாழ்க்கைத் துணையைத் தெரிந்தெடுக்கும் போது எவ்விதமான குணாதிசயங்களை எதிர்பார்க்க வேண்டும், அல்லது பெற்றோர்கள் எவ்விதமான குணாதிசயங்களை தங்களுடைய மனதில் கொள்ள வேண்டும்? குறிப்பாக, கிறிஸ்தவர்கள் மத்தியிலும், கர்த்தருடைய சபை அங்கத்தினார்கள் மத்தியிலும் எது மிக முக்கியமானதாக இருக்கிறது?

ஒரு பூரண வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனுக்கு, அல்லது தேவனுடைய ஞானத்திற்கேற்ப யோசித்துக்கொண்டிருக்கின்ற கிறிஸ்தவ பெற்றோர் களுக்கு, உள்ளான வாழக்கைத்துணை ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவனாக இருக்கவேண்டுமென்ற எண்ணமே முதலும் எல்லாவற்றிற்கும் மேலானாதுமான எண்ணமாக இருக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாயிருந்த போது, அன்பு கிறிஸ்தவ பெற்றோர்களால் ஏதோ ஒரிடத்தில் வளர்க்கப்பட்டுக் கொண்டிருந்த, ஒரு நாள் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் நம்முடைய பிள்ளைகளாகிய சிறு பிள்ளைக்காகவும், பையனுக்காகவும் நாம் அதிகம் ஜெபித்தோம் இது அவர்கள் கிறிஸ்தவர்களைத் திருமணம் செய்வார்கள் கிறிஸ்தவர்களைத்தான் செய்யவேண்டும் என்பது முன்னமேயே தீர்மானம் செய்யப்பட்ட ஒன்றாக இருந்தது.

சிலர் "ஏன்? ஒருவர் எந்த சபை அங்கத்தினர் அல்லது எந்த சமயத்தைப் பின்பற்றுகிறவர் என்பது பற்றியகாரியம் என்னவிதத்தில் மிக முக்கியமான ஒன்று? என் வினா எழுப்புவர்"

இதன் பதிலாக, புருஷனை அல்லது மனைவியை தெரிந்து கொள்ளுவது சம்பந்தமான பின்வரும் இக்கேள்விகளைப் பற்றி ஆழ்ந்த யோசனை செய்யுங்கள்:

★ இந்த மனிதன் என்னுடைய குடும்பத்தின் ஆவிக்குரிய தலைவராக இருப்பார். அவர் ஒரு பலமிக்க கிறிஸ்தவராக இல்லாவிட்டால், நான் நித்திய இரட்சிப்பை பெறும்படிக்கு என் வாழ்நாள் முழுவதும் விசுவாசமிக்க வாழ்வு வாழ அவர் எவ்வாறு எனக்கு உதவ முடியும்?

★ இந்த மனிதன் ஒரு கிறிஸ்தவர் அல்ல என நான் கருதுகின்றேன். அவர் எவ்வித பழக்கவழக்கங்களை கொண்டிருப்பார் அல்லது எவற்றில் முன்னேறுவார்? என்னுடைய குடும்பத்திற்கு சமாதானத்தைக் கொண்டுவருவாரா? அல்லது சண்டையை கொண்டுவருவாரா? அவர் மது அருந்துவாரா, பொய் சொல்லுவாரா, ஏமாற்றுவாரா, ஒழுக்கமில்லாமல் வாழ்வாரா, என்னை அல்லது என் பிள்ளைகளை தகாத முறையில் நடத்துவாரா? ஒரு கிறிஸ்தவனுக்கு தேவன் தன் வாழ்வின் மையமாயிருப்பாரானால் , அவரே அந்த முதலாவது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொள்ள வேண்டும் அதன் பிறகு என்னுடைய புருஷன் அவருக்கு எதிலும் இடம் கொடுக்கவில்லையென்றால், இது எப்பேர்பட்ட மனவேறுபாடுகளையும் வேதானையையும் உருவாக்கும்?

★ இந்த பெண் என்னுடைய பிள்ளைகளுக்கு தாயாகயிருப்பாள். என்னைக்காட்டிலும் அவள் நாள் முழுவதும் அதிகமான நேரம் அவர்களுடனிருப்பாள் அவளோ கிறிஸ்தவளாக இல்லாதபோது அவள் ஆவிக்குரிய காரியங்களை பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிக்க முடியும்?

★ நான் என்னுடைய மனைவியின் மேல் கொண்டுள்ள அன்பில் வளர விரும்புகிறேன். அவள் ஒரு கிறிஸ்தவளாக இல்லாவிட்டால், மேலும் நான் அவளைக் கிறிஸ்துவுக்கு ஆயத்தப்படுத்த முடியவில்லை என்றால், நித்திய ஜீவனுக்கேதுவான நம்பிக்கையில்லாத அவளுடைய வாழ்வையும் மரணத்தையும் பார்ப்பது மிகவும் வேதனை நிறைந்த காரியமாக இருக்கும்.

★ பத்தில் எட்டு நபர் கிறிஸ்தவரல்லாதவரை திருமணம் செய்து கடைசியில் தேவனையும் சபையையும் விட்டு விலகிப் போகின்றனர் என புள்ளி விவரம் கூறுகிறது. உதாரணமாக நான் கடந்து செல்ல திட்டமிட்டிருக்கும் நிலப்பகுதி கண்ணிவெடி வைக்கப்பட்டிருக்கிறது, அப்பொழுது அதைக் கடக்க முயற்சிசெய்கிறவர்கள் வெடித்து சிதறியிருக்கிறார்கள் என்பதை நான் அறிந்தால், நான் அதற்கப்பாலேயே நின்றுவிட மிகுந்த ஞானமுள்ளவளாய் இருப்பேன். கிறிஸ்தவரல்லாத

துணையை தெரிவுசெய்கிற அநேகர் சோர்வடைந்து தேவனை விட்டு விழுந்து போயிருக்கிறார்கள் என்பதை நான் அறியும் போது, அதே தவறை நான் தெரிவு செய்ய மாட்டேன்.

நாம் 2கொரிந்தியர்6:14-18-ல் இந்த எச்சரிப்பை வாசிக்கிறோம்: "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது?

தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? 'நான் அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்' என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே, ஆனபடியால், 'அசுத்தமானதைத் தொடாதிருங்கள்' என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்"

நம்முடைய பரமப்பிதாவாகிய தேவனுடைய ஞானத்தில், ஒரு வாழ்க்கைத் துணையைப் பற்றிய காரியத்தில் தவறான தெரிந்து கொள்ளுதலிலிருந்து நம்மை விலக்கிக்காக்கும் படிக்கு இந்த வார்த்தைகளை அவர் எழுதியிருக்கிறார். இரண்டாவது ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்குரிய தீர்மானத்திற்கு, ஒருவருடைய கணவன் அல்லது மனைவியினுடைய தெரிந்து கொள்ளுதல் மிக ஆபத்தானதாயிருக்கிறது. ஒருவர் இது பற்றி மிக ஊக்கமாக ஜெபிக்கமுடியாது ஒவ்வொருதீர்மானத்தையும் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் திருமணநாளின் முதற்கொண்டே தொடர்ந்து பாதிக்கும். ஒரு கிறிஸ்தவள் ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவரை திருமணம் செய்தால், அவர்கள் தேவனுக்குள் இணைந்து வல்லமையாகப் பலப்பட்டு வளருவார்கள், மேலும் அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் விலையேறப்பெற்ற விசுவாசத்திற்குள் கொண்டுவருவார்கள். ஆனால் ஒரு நபர் கிறிஸ்தவத்தினுடைய தன் மதிப்பீட்டிலும், தனக்குள்ள தவறான தீர்னானத்திலும் சமயம் முக்கியமான ஒன்று அல்ல என்ற எண்ணத்தில் கிறிஸ்தவரல்லாத ஒரு நபரை திருமணம் செய்தால், அவன் தன் வாழ்வினுள் மிகுதியான தீமைநிறைந்த காரியங்களையும், அநேகமாக அவன் தன்னுடைய ஆத்துமாவிற்கும் தன்னுடைய பிள்ளைகளின் ஆத்துமாக்களுக்கும், தனக்குப்பின் வரும் தன் சந்ததிகளுக்கும் நித்திய அழிவையும் கொண்டு வந்திருக்கிறான். தயவு செய்து, இந்த தீர்மானத்தை மறு பரிசீலனை செய்யுங்கள்!

-தமிழில் குளோரி அர்ஜூனன்

சிறுவர்பகுதி

# பவுலுக்கும் பர்னபாவுக்கும் பலியிட வந்த ஜனங்கள்

**வேதபகுதி: அப்போஸ்தலர் 14:8-18**

லீஸ்திரா பட்டணத்தில் ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்து ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனை பவுல் உற்றுப் பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே என்ன நடந்தது தெரியுமா? அவன் குதித்தெழுந்து நடந்தான். இதைப் பார்த்த ஜனங்கள் தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் வந்திருக்கிறாங்க என்று அந்த நாட்டு லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட ஆரம்பித்து பவுலை **மெர்க்கூரி** என்றும் பர்னபாவை **யூப்பித்தர்** என்றும் சொன்னாங்க. இத்தோடு விட்டுவிட்டார்களா? விடவில்லை.

அந்த பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டு வந்து, ஜனங்களோடே கூட அவர்களுக்கும் பலியிட மனதாயிருந்தான். இதைக் கேட்டபொழுது பர்னபாவும், பவுலும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய் மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப்பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டு மென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் என்றாங்க.

இப்படி அவர்கள் சொல்லியும் தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அரிதாயிருந்தது. பவுலும் பர்னபாவும் அறிவித்த தேவனிடத்திற்கு அவர்கள் மனந்திரும்பாமல் பவுலையும் பர்னபாவையுமே தேவர்கள் என்று கருதி அவர்களுக்கு பலியிட முயற்சித்தாங்க நாமும் இப்படி தேவனால் அனுப்பப்பட்டவர்களுக்கு துதியையும் மகிமையையும் செலுத்திவிடக் கூடாது. ஆனால் பாருங்க பேதுரு சபை, பவுல் சபை, யோவான் சபை என்றெல்லாம் வைத்துக்கொண்டு இருக்கிறாங்க. கொஞ்சம்குறைய தேவனை அறியாத இந்த லீஸ்திரா பட்டணத்தார்களைப் போல இவர்களும் அப்போஸ்தலர்களுக்கு சபைகளைக் கட்டுகிறாங்க. ஆனால் இதை பவுலோ பர்னபாவோ அன்றே ஏற்றுக்கொள்ளவில்லை. தேவனிடத்திற்கு மனந்திரும்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆகையால் நம்முடைய உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை தேவன் ஒருவருக்கே செலுத்தக்கடவோம்.

மனப்பாட வசனம்: "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்"
(கொலோசெயர் 3:17)



# ஜெயம் கொடுக்கும் தேவன்

சகோ.கிறிஸ்டிகுமார்

இன்றைய நாட்களில் பாவங்கள், சாபங்கள், பிசாசின் கட்டுகள், தோல்விகள், மனக்கலக்கங்கள், சோர்வுகள் போன்ற பல விதமான போராட்டங்களில் உழன்று கொண்டிருக்கும் மக்களை காண்கிறோம். இப்படிப்பட்டதான மக்களுக்கு, விடுதலை வாழ்வினை கொடுக்கவிரும்பும் தேவன், பரிசுத்தஆவியானவர் மூலமாக பவுலானவர் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1கொரி.15:57) என்று கூறுகிறார்.

நமது தேவன் தோல்வியில்லாதவர். இயேசுவானவர் இப்பூவுலகில் அவதரித்த நாளிலிருந்து, பலவிதமான போராட்டங்களை சந்தித்து வெற்றி கண்டவர். அவர் மரணம், பாதாளம், உலகம், பிசாசு, பாவம், சோதனை அனைத்தையும் ஜெயித்தவர். வேதாகமம் அவரை இஸ்ரவேலின் ஜெயபலமானவர், பொய் சொல்லுகிறதும் இல்லை என்று கூறுகிறது (1சாமு.15:29). வெற்றியை பெறாத ஒருவருக்கு வெற்றியைப் பற்றிய வழிகள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மாறாக தோல்விக்குரிய வழிகளை நன்கு தெரிந்து வைத்திருப்பர். இப்படிப்பட்டவர்களுடைய வழிகளை பின்பற்றுபவர்களும் தோல்விக்குரிய வழிகளை தெரிந்து கொண்டு வாழ்க்கையில் விடுதலையில்லாமல் அலைந்து திரிவர். இவர்கள் எடுக்கும் முயற்சிகள் எல்லாமே தோல்வியாக முடியும். ஆனால் ஜெயம் கொடுக்கும் தேவனாகிய நமதாண்டவரைப் பற்றிக் கொண்டவர்கள் அத்தனைபேரும் ஜெயமுள்ள வாழ்க்கை வாழ முடியும். ஏன் என்றால் அவர் ஒருவரே மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தெழுந்தவர். மனிதனாக இப்பூமியில் அவதரித்து மனிதர் படும் பாடுகளை அவர் பட்டதினாலே, அவ்விதமான பாடுகளுக்குள்ளாகும் மனிதர்களை விடுவிக்க அவரால் கூடும். இதை வேதாகமத்தில் எபி.2:18-ல்இவ்வாறாக வாசிக்கின்றோம். அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.

இன்று நமக்கு, தாங்க முடியாத சோதனைகள் வரும்போது, எங்கு நமக்கு விடுதலை கிடைக்கும், யார் இதிலிருந்து நிரந்தர விடுதலை தருவார் என அங்குமிங்கும் அலைகிறவர்களாக இருக்கின்றோம். கண்ட கண்டதை யெல்லாம் வணங்கமுற்படுகிறோம். ஆனாலும் வாழ்வில் விடுதலை என்பது இல்லவே இல்லை. இப்படிப்பட்டவர்களை பார்த்து வேதம் கூறுகிறது சங்.75:6-ல் கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து ஜெயம் வராது. ஜெயவீரர் கிறிஸ்துவினிடத்திலிருந்து, ஜெயம் வரும். குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும் என்று நீதிமொழிகள் புத்தகம்

வெளிப்படுத்துகிறது (நீதி.21:31). பிரியமானவர்களே நாமும், பாவத்தை எதிர்கின்ற சூழலில், தொழிலில், மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியில், தேவனை அறிகின்றவிதத்தில், ஜெபத்தில், பலவிதமான போராட்டங்கள் வரலாம். அவ்வேளைகளில் நாம் சோர்ந்து விடாமல், சோதனைகளில் ஜெயமெடுத்த இயேசுகிறிஸ்துவை மனதில் கொண்டு, அவர் வார்த்தைகளுக்கு செவிகொடுத்து, அவர் சித்தம் அறிந்து செயல்படுவோமேயானால் ஜெயகிறிஸ்து நமக்கு நிச்சயம் வெற்றி தருவார். பரிசுத்த ஆவியானவர் பவுலின் மூலமாக கூறும் போது 2கொரி.3:17-ல் கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு எனக் கூறுகிறார்.

அன்பானவர்களே, மேலும் நாம் ரோம.8:37ஐ வாசித்தோமானால், நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றிலும் ஜெயம் கொள்ளுகிற வர்களாயிருக்கிறோமே. இயேசு கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே அவர் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுகிறது. இன்னுமாக வேதம்கூறுகிறது நல்லவனுக்காக ஒருவன் மரிக்க துணிவான், பாவிக்காக, நட்பை மறந்தவனுக்காக எவன் மரிக்க துணிவான்? இயேசுகிறிஸ்து பாவிக்காகத்தானே மரித்தார். இவ்விதம் அன்பு கூர்ந்த இரட்சகராலே, உபத்திரவம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், வியாகுலம் போன்றவற்றிலிருந்து நிச்சயம் ஜெயத்தை பெற்றுக்கொள்கிறவர்களாயிருக்கிறோம் அவருக்கு கீழ்படியும்போது, ஜெயம் கொடுக்கும் தேவன், தமது அடியவர்களுக்கும் ஜெயத்தை கட்டளையிட்டார் என்பதை பின் வரும் தேவதாசர்களைக் கொண்டு அறிகிறோம். மரணத்தருவாயில் ஜெயம் பெற்ற தானியேலைக் குறித்து வேதாகமம் தானி6:28-ல் தரியுவின் ராஜ்யபாரகாலத்திலும், கோரேசுடைய ராஜ்யபாரகாலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது என வாசிக்கிறோம்.

தரியு ராஜாவின் காலத்தில், ஒரு குற்றமும், தவறும் செய்யாத தானியேலை எவ்விதத்திலாவது குற்றம் கண்டுபிடிக்கவேண்டுமென்று ராஜாவின் பிரதானிகளும், தேசாதிபதிகளும், எண்ணிக்கொண்டு, நாம் இந்த தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய வேதவிஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்திரத்தை கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தை கண்டு பிடிக்கக் கூடாது என்றார்கள் (தானி.6:5). இவ்விதம் குற்றப் படுத்தி சிங்கத்தின் கெபியிலே போடப்பட்டும், தானியேலை சிங்கத்தின் வாய்க்கு தேவன் விடுவித்தார். இவ்விதமாக தானியேல் தேவனின் பார்வையில் குற்றமற்றவனாகவும், ராஜாவின் பார்வையில் நீதிகேடு செய்யாதவனாகவும் இருந்தபடியினால் அவன் மரணத்தை ஜெயமாக மாற்றினார்.

அடுத்ததாக பாவத்திலே ஜெயம் பெற்ற யோசேப்பை குறித்து ஆதியாகமம்39:10-15 வரை வாசிக்கலாம். அவனை பாவம் செய்ய போத்திபாரின் மனைவி கட்டாயப்படுத்தினபோது, இத்தனைப் பெரிய பாவத்திற்கு உடன்பட்டு என்தேவனுக்கு விரோதமாக பொல்லாங்கு செய்வது எப்படி? என்று பாவத்தை விட்டு ஓடினான் செய்தார். இவற்றிற்கெல்லாம், யோசேப்பு தேவனுக்கு பயந்ததினாலும், குற்றமற்றவனாய் வாழ்ந்ததினாலும், தேவன் ஏற்றவேளையிலே உதவி செய்து அவனது வாழ்வை எகிப்திலே உயர்த்தினார்.

பிசாசின்மேல் ஜெயம் எடுத்த இயேசுகிறிஸ்துவை பற்றி லூக்.4:5,7 வாசிக்கின்றோம். பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து,

நீர் என்னை பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று கூறுவதாக பார்க்கிறோம். எவ்விதத்திலாவது ஆசையைக் காட்டி தன்னை பணிந்து கொள்ள செய்யலாம் என்று பிசாசு வகை தேடுகிறான். ஆனால் ஜெயக்கிறிஸ்துவோ இவ்வுலகமானது அழிவுக்குரியது என்று தெரிந்ததினாலும், பிதாவின் சித்தம் அறிந்து செயல்பட்டதினாலும், அவர் ஒருவருக்கே பணிந்து ஆராதனை செய்தால் அழிவில்லாத நித்திய ராஜ்யத்தை தருவார் என்று இவ்வுலக தலைவனை இயேசுவால் ஜெயிக்கமுடிந்தது. அந்த பிசாசை, ஆண்டவராகிய இயேசு சிலுவையின்மேல் ஆணியடித்து அவனுடைய துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு வெளியரங்கமானகோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ.2:15).

மோசேயினுடைய வாழ்க்கையை பாருங்கள் எபி.11:25ல் அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டார் என்று வேதம் கூறுகிறது. இவர்கள் எல்லாம் நம்மைப்போல் இவ்வுலகில் வாழ்ந்தாலும் பாவத்திற்கு அடிமையாகிவிடாமல், பாவத்தை வெறுத்து பரிசுத்தத்தை நாடி, தேவன் பேரில் கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக உலகத்தினை ஜெயித்து, தேவனால் உயர்த்தப்பட்டார்கள்.

இவ்விதமாக தேவனுடைய அடியார்களைப்போல் பாவத்திற்கும், பிசாசிற்கும், சோதனைகளுக்கும், உலகமாயைக்கும் எதிர்த்து நின்று ஜெயம் பெற வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதற்காக நமதாண்டவராகிய கிறிஸ்து மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தார். இதை 1கொரி.15:55ல் மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என வாசிக்கிறோம்.

ஜெயம் பெற்றவர்களுக்கு தேவன் அநேக நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் வைத்திருப்பதாக வெளிப்படுத்தின விசேஷம்2,3 அதிகாரங்களில் வாசிக்கிறோம் ஜெயங்கொள்ளுகிறவனுக்கு, ஜீவவிருட்சத்தின் கனியையும், ஜீவகிரிடத்தையும், மறைவான மன்னாவையும், ஜாதிகள்மேல் அதிகாரத்தையும் வெண்வஸ்திரத்தையும், தேவஆலயத்தின் தூணாகவும், தனது சிங்காசனத்திலே இடத்தையும், இது போன்ற அளவற்ற ஆசீர்வாதங்களையும் தருவேன் என வாக்குதத்தம் செய்திருக்கிறார்.

எனக்கன்பானவர்களே, தேவன் நம்மை இதற்காகவே அழைக்கிறார். நாமும் அவர் சத்தத்திற்கு செவி கொடுத்து, அவரில் விசுவாசம் உள்ளவர்களாகி, உண்மையுள்ளவர்களாய், பாவத்திற்கு விலகி குற்றமற்றவர்களாய் வாழும்போது இம்மையிலும் மறுமையிலும் நம்மை ஆசீர்வதிக்க, தேவன் ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார். நாமும் ஆயத்தமுள்ளவர்களாய் இருப்போமாக!



***ஜெபியுங்கள்***

- கரூர் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 15-வது வாசகர் கருத்தரங்கிற்காக ..
- ஜூன் மாதம் பள்ளியில் சேரும் குழந்தைகளின் தேவைகள் சந்திக்கப்பட ..
- நம் நாட்டில் சுவிசேஷம் தடையில்லாமல் அறிவிக்க கிடைத்த வாய்ப்புகளுக்காக ..

## பொது அறிவு சோதனை

1. மக்களவை தேர்தலில் போட்டியிட குறைந்த பட்ச வயது என்ன? அ)18வயது ஆ)35வயது இ)25வயது
2. பூமியைப்போல ஒரு நாளைக்கு 24மணி நேரம் கொண்ட கோள் எது? அ)நெப்டியூன் ஆ)செவ்வாய் இ)புளுட்டோ
3. உலகின் முதல் விண்வெளி நிலையத்தின் பெயர் என்ன? அ)சல்யூட் -1 ஆ)மிர் இ)ஸ்கைலாப்
4. இந்தியாவின் மிக பெரிய நதி எது? அ)காவேரி ஆ)யமுனை இ)கங்கை
5. சர்வதேச குடும்ப தினம் என்று கொண்டாடப்படுகிறது? அ)செப்டம்பர் ஆ)மே,15 இ)மார்ச்,26

விடைகள்
1. 25 வயது
2. செவ்வாய்
3. சல்யூட் -1
4. கங்கை
5. மே,15

---

ஒருவழி

'ஒருவழி' வேதபாடம்
The Master Course படிக்க
விரும்புகிறவர்கள் இன்றே தபால்
செலவுக்காக ரூபாய்30-ஐ அனுப்பி இரண்டு
வருடத்தில் Certificate
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, Post Box 5,**
**Batlagundu-624 202**
**S.INDIA**

---

### தெரிந்து கொள்ளுங்கள்

முதன் முதல்

உண்டாக்கப்பட்டவன்
-----ஆதாம்
பேழையைக்கட்டியவன்
-----நோவா
உயரமாக கட்டப்பட்ட கோபுரம்
------பாபேல்

---

## வேதஅறிவுப்போட்டி எண் 45-ன் விடைகள்

1. பணமின்றி -ஏசா.5:23
2. நம்மை -1கொரி.7:15
3. கட்டமுடியாது விடுவிக்கமுடியாது -யோபு.12:14
4. பரிசுத்தமாயும் கனமாயும் -1தெச.4:5
5. இனிமையானவைகள் -நீதி.22:11
6. மாயமற்றதாயிருப்பதாக -ரோம.12:9
7. ஆகாஸ் -2நாளா.28:19
8. ஆம் -அப்.2:30
9. நாபால் -1சாமு.25:37
10. மேலானவர் -யோவா.3:31

## வேதஅறிவுப்போட்டி எண் 45-ன் விடைகள்

| | |
|---|---|
| P.அலிஸ்மேரியம்மாள் | -வதிலை |
| S.தண்டபானி | -சிலுவத்தூர் |
| Dr.ஜெயசிங் | -சென்னை |
| V.சரவணகுமார் | -கோவை |
| R.செந்தில்குமார் | -திடுமல் |
| குளோரி பவுல்சர் | -சென்னை |
| R.சாமுவேல் | -ஊதியூர் |
| G.மெர்சிரூபி | -கொடுவாய் |
| K.பிரஜிதா | -ஈரோடு |
| Mrs.வின்சென்ட்ராஜ் | -மதுரை |
| S.ஜெயராணி | -செ.பாளை |
| Ira.எதிராசன் | -சங்ககிரி |
| V.ரத்னா | -எம்.ஜி.பாளை |
| S.R.பெரியசாமி | -சேளூர் |
| B.ஜெயராணி | -க.குமரி |
| R.பிளசன் | -க.குமரி |
| T. வேலுச்சாமி | -ஜே.பாளை |
| A.சேவியர்மேரி | -மதுரை |
| D.பவுல் | -செ.பாளை |
| M.பிலிப் | -செ.பாளை |
| G.P.ஏசையன்ராஜ் | -கோபி |
| J.S.நிர்மலாராஜ் | -மதுரை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை |
| V.கோவலன் | -மதுரை |
| S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| N.கமலவேணி | -சென்னை |
| A.ஸ்டேன்பிரவின் பிஜி | -செ.பாளை |
| A.ஜோதிகாந்தம் | -போ.பாறை |
| M.ராஜேஸ்வரி | -ரா.வலசு |
| Mrs.எஸ்தர்சேகர் | -கேபி |
| Mrs.பாரதி | -கேபி |

# சந்திப்போம்! சிந்திப்போம்!

D.எபிநேசர்

**உரையாடல் - 22**

தாவீது : போன தடவை சொன்னியே! என்னப்பா அந்தக்கண்டிஷன்?

யேனத்தான் : அதுவேற ஒன்னுமில்லப்பா. ஞானஸ்நானம் எடுத்துக்கறதுன்னு முடிவுபண்ணிட்டேன். ஆனா முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கறதுன்னா எனக்குப் பயமா இருக்கு, ஆத்துல தண்ணிவேற இல்லாமஇருந்துச்சு, அதனால நிறைய சபைகள்ல கொடுக்கற மாதிரி தெளிப்பு ஞானஸ்நானம் அல்லது ஊற்றுதல் ஞானஸ்நானம் எடுத்துக்கறேனே! என்ன சொல்றே!

தாவீது : ஏம்பா உனக்கு இவ்வளவு நேரம் சொன்னதே வேஸ்ட் போல் இருக்குதே. முழுக்குதல் தவிர வேற எந்த ஞானஸ்நானமும் பைபிள்ல இல்லேப்பா. ஒரே ஞானஸ்நானம்தான் எபே.4:5 அது முழுக்கு ஞானஸ்நானம்தான். எபே.5:26 நம்ம சௌகரியத்துக் காக தேவனுடைய கட்டளையை மீறமுடியாதுப்பா உபா.12:32.

யோனத்தான் : எனக்குத் தெரியும் தாவீது. ஆனா எல்லோருக்கும் தெளிவா தெரியனுமில்லே அதுக்காகத்தான் அப்படி ஒரு கேள்வி கேட்டேன். நீ இவ்வளவு தூரம் விலாவாரியா சொன்னதுக்கப்புற மும்புரிஞ்சுக்கலேன்னா எப்படி? சரி ஞானஸ்நானம் நான் எப்ப எடுத்துக்கலாம்?

தாவீது : இதுக்கு நாள் நட்சத்திரமெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. எப்பதீர்மானம் பண்றமோ அப்பவே எடுத்துக்கலாம். முதன் முதலா பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட மூவாயிரம் பேர் அப்பவே எடுத்துக்கிட்டாங்க. அப்.2:41 எத்தியோப்பிய மந்திரி வசனத்தைக் கேட்ட உடனே எடுத்துக்கிட்டாரு அப்.8:38 நடுராத்திரியிலே கூட எடுத்திருக்காங்க அப்16:38 பவுலிடம் அனனியா சொல்கிறார் “இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு” எனவே இரட்சிப்பைத் தாமதப்படுத்த வேண்டாம்.

யோனத்தான் : சரி. ஞானஸ்நானம் எடுத்துக்க ஆத்துக்குப் போலாமா?

தாவீது : ஆத்துல தண்ணி இல்லேன்னு சொன்னியே!

யோனத்தான் : அது போன மாசத்து நிலவரம். இப்போ தேவன் நல்ல மழையைக் கொடுத்திருக்காரு இல்லையா? ஆத்துல தண்ணி ஓரளவுக்குப் போகுது. கடுமையான தண்ணீர் பஞ்சத்தையும் வறட்சியையும் போக்கின தேவனுக்குத் ஸ்தோத்திரம் ஆத்துலேயே எடுத்துக்கலாம்.

தாவீது : சரி வா. நாம் சபையோரிடம் போவோம். இந்த விஷயத்தை சபையாரிடம் சொல்வோம் எல்லோரும் சந்தோஷப் படுவார்கள். அவர்களையும் அழைத்துக்கொண்டு நாம் ஞானஸ்நானம் எடுக்கப்போவோம்.

யோனத்தான் : இதைப் படித்துக் கொண்டிருக்கிற இரட்சிக்கப்படாதவர்கள் உடனடியாக உங்கள் அருகிலிருக்கிற கிறிஸ்துவின் சபையை அணுகுங்கள் அல்லது தி வேர்ட் ஆப் கிரைஸ்டு முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**மீண்டும் சந்திப்போம்...**

**பொருள்** : தேவனுடைய மக்கள் அநீதி நிறைந்த ஒரு தேசத்தினால் கொடுமைப் படும்போது, அவர்கள் தேவனுடைய இரக்கத்திலும் நீதியிலும் விசுவாசம் கொள்ளச் செய்தல்

**ஆக்கியோன்** : ஆபகூக்

**காலம்** : ஏறக்குறைய கி.மு.605-598

**திட்டவரைக் குறிப்பு** :

★ ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் குறித்து கலக்கமுற கூடும் (அதி.1)

★ கர்த்தர், தம்மிடம் ஜனங்கள் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும்படிக்கும் விசுவாசம்வைக்கும் படிக்கும் விரும்புகிறார் (அதி.2)

★ ஒரு நம்பிக்கையின் பாடல் கொடிய நாட்களில் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது (அதி.3)


**சிறப்புச் செய்தி :**

"குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய்சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை, இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்".

**வரலாற்று பின்னணி :**

யோயாக்கீம் ராஜாவாயிருந்த காலத்தில் யூதாவிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்களின் முதல் தொகுதியினர் பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டபோது, அநீதி நிறைந்த மக்களின் கரங்களால் நீதிமான்கள் அனுபவிக்கும் துன்பத்தின் பிரச்சனைக் குறித்து ஆபகூக் தீர்க்கதரிசி விவாதிக்கிறார். மற்றும் தேவனுடைய மக்கள் தேவனை விசுவாசிப்பதற்காக, அவருடைய நியாயத்தீர்ப்பு,மற்றும் அழைப்பை வெளிப்படுத்தல்.

**சீர்தூக்கிப் பார்** **"கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்" ( நீதி.16 : 2 )**



"தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல" ( 2கொரி.10:12 )

## வேத அறிவுப் போட்டி எண்-45

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில்* ***இம்மாதம் 30 க்குள்*** *எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் யாருடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம் என்பார்கள்?
2. கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு விசுவாசித்த அதி பதியார்?
3. பத்துநாள்வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப்பாரும் என்ற தீர்க்கதரிசி யார்?
4. அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் எப்படிப் பட்டவர்களாயிருக்கிறோம்?
5. குழியில் இறங்குகிறவர்கள் ஆண்டவருடைய சத்தியத்தை என்ன செய்வதில்லை?
6. அவர் எங்களைத் தப்புவித்தார்; இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம் என்று எழுதிய அப்போஸ்தலன் யார்?
7. காரியத்தை மறைப்பது யாருக்கு மேன்மை?
8. ஆவியின்படி நடக்கிறவர்கள் எவைகளைச் சிந்திக்கிறார்கள்?
9. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்ற வேதபாரகன் யார்?
10. பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு எப்பட்டணங்களை திருஷ்டாந்தமாக வைத்தார்?

## நடப்புச் செய்திகள்

- வெளிநாடுகளுக்கு வேலைகளைக் கொடுப்பதற்குத் தடை விதிக்கும் சட்டம் ஒன்றை அமெரிக்காவில் உள்ள டென்னசி மாநிலம் கொண்டு வந்துள்ளது.
- உலக அளவில் 42 மில்லியன் பேருக்கு எய்ட்ஸ் நோய் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.
- தமிழ் நாட்டில் உள்ள தனியார்பள்ளிகள் உள்பட அனைத்து பள்ளிகளிலும் பயிலும் மாணவ- மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது (1 வது வகுப்பு முதல் +2 வரை)
- கடல் நீரை குடிநீராக்கும் மத்திய அரசுதிட்டம் முதல் முறையாக சென்னையில் ஆரம்பிக்கப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா, பாக்கிஸ்தான், ஆஸ்திரேலியா நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி ஆலந்தில் ஆகஸ்ட் 22-ம் தேதி தொடங்குகிறது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th June 2004.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.




கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு–624 202.
திண்டுக்கல் Dt. ✆ : (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K.. திண்டுக்கல் Dt.

7, ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து, அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்–626 501, தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.